## தமிழ்நாட்டின் தனித்துவ அடையாளங்களை அழிக்கத் துடிக்கும்

# பாசிச பா.ஜ.க.வையும் - அடிமை அ.தி.மு.க.வையும் மக்களின் துணை கொண்டு வீழ்த்துவோம்!

## விக்கிரவாண்டியில் நடைபெற்ற கழக நிர்வாகிகள் கூட்டத்தில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**விக்கிரவாண்டி, டிச. 9 –**

**விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் – அணிகளின் நிர்வாகிகள் – வாக்குச் சாவடி பொறுப்பாளர்களை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சந்தித்து வாழ்த்துரை வழங்கினார்.**

**அப்போது அவர், "சமூக நீதி, மதச்சார்பின்மை உள்ளிட்ட தமிழ்நாட்டின் தனித்துவ அடையாளங்களை அழிக்கத் துடிக்கும் பாசிச பா.ஜ.கவையும் அவர்களின் தமிழ்நாட்டு கிளையான அடிமை அ.தி.மு.க.வையும் மக்களின் துணை கொண்டு வீழ்த்துவோம்" என எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழகத்தின் நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் உங்களை எல்லாம் ஒரே இடத்தில் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அதற்கு முன்பாகவும், முதலாவதாகவும் உங்களுக்கு என்னுடைய நன்றியை மாவட்டக் கழகத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு நிர்வாகியும், ஆற்றல் மிக்க செயல் வீரர்கள் என்று ஏற்கனவே நீங்கள் பலமுறை நிரூபித்து காட்டி இருக்கிறீர்கள். 2024- இல் நடந்த இடைத்தேர்தலில் கிட்டத்தட்ட 70,000 வாக்குகள் வித்தியாசத்தில் நம்முடைய அன்னியூர் சிவா அவர்களை நீங்கள் வெற்றி பெற வைத்தீர்கள்.

மூன்று நாட்கள் இங்கே தங்கி உங்களோடு சேர்ந்து நானும் விக்கிரவாண்டி தொகுதி மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தேன். முயற்சி செய்தால், எதிர்க்கட்சியின் வாக்குகள் காணாமல் போய்விட்டது, எதிர்க்கட்சிகள்கூட தி.மு.க-வின் பக்கம் திரும்பிவிட்டது என்ற சரித்திரத்தைப் படைத்தவர்கள் இந்த விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி மக்கள்.

மொத்தம் இருந்ததே 1,95,000 வாக்குகள் தான். அதில் 1,25,000 வாக்குகள் நம்முடைய உதயசூரியன் சின்னத்திற்கு, நம்முடைய வெற்றி வேட்பாளர் சட்டமன்ற உறுப்பினருக்குக் கிடைத்தது. அந்த தேர்தல் முடிவுகள் வந்த போது, அ.தி.மு.க. வாக்குகள் எங்கே போனது என்று இந்தப் பகுதி மக்களும் சரி, பத்திரிகைகளும் சரி ஆராய்ச்சி செய்கிற அளவுக்கு களப் பணியைச் செய்து சாதனை செய்து பெருமை கொடுத்தவர்கள் இங்கே வந்திருக்கக்கூடிய பாக முகவர்கள், கழகத்தின் உடன்பிறப்புகளாகிய நீங்கள். நிச்சயமாக விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் நடந்ததுதான், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் இந்த விக்கிரவாண்டி தொகுதியில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த விழுப்புரம் மாவட்டத்திலும், ஒட்டுமொத்த தமிழ்நாட்டிலும் இந்த நிலைமை நிச்சயமாக ஏற்படப் போகிறது.

### இயக்கத்தின் வலிமை

நம்முடைய கலைஞரின் பெருமையைப் பேசும்போது நாம் சொல்வோம். கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனையோ தேர்தலில் வெற்றியைப் பெற்றிருக்கிறது, வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறது. ஆனால் எது எப்படியோ, தான் நின்ற தேர்தலிலெல்லாம் வென்ற ஒரே தலைவர் என்ற பெருமைக்குரியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞருக்கு அந்தப் பெருமை என்றால், நம்முடைய தலைவருக்கு இன்னொரு பெருமை இருக்கிறது. கழகத் தலைவராகப் பொறுப்பேற்றபின் அவர் சந்தித்த அனைத்து தேர்தலிலும் கழகத்திற்கு வெற்றியைத் தேடித் தந்த தலைவர் என்றால், அது நம்முடைய தலைவர் அவர்கள் தான். இந்த இரண்டு பெருமைக்கும் மூல காரணமாக இருப்பவர்கள் இங்கே வந்திருக்கக்கூடிய கழகத்தின் உடன்பிறப்புகளாகிய நீங்கள் தான். நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது, நீங்கள் இல்லாமல் தலைவர் கிடையாது, நீங்கள் இல்லாமல் திராவிட மாடல் ஆட்சி கிடையவே கிடையாது.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 75 வயது முடிந்து 76-வது வயதில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். 75-வது வருடத்தை முன்னிட்டு, பல்வேறு நிகழ்ச்சிகள் சென்ற வருடம் முழுவதும் நடந்தது. இளைஞர் அணி சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தினோம். சமீபத்தில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத் திருவிழா என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்தினோம். இப்படி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தினோம். கடந்த 76 வருடங்களாக நம்முடைய இயக்கம் சந்திக்காத போராட்டங்களே கிடையாது, சந்திக்காத சோதனைகளே கிடையாது, சந்திக்காத நெருக்கடிகள் கிடையாது, நெருப்பாறுகள் கிடையாது. இதையெல்லாம் கடந்துதான் இன்றைக்கு நம்முடைய இயக்கம் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இத்தனை வருடங்களுக்குப் பிறகும், இத்தனை சோதனைகளுக்குப் பிறகும் நம்முடைய இயக்கம் இன்றைக்கு வலிமையோடு, இளமையோடு இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இங்கே வந்திருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருத்தரும் தான், உங்களுடைய உழைப்புதான் காரணம்.

குறிப்பாக, 2021 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று, தமிழ்நாட்டு மக்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக நம்முடைய தலைவர் அவர்களை அந்த முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைத்தது இங்கே வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் நீங்கள்தான். உங்களால்தான் இன்றைக்கு, இந்தியாவே திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு மாநிலமாக, இந்தியாவே திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு முதலமைச்சராக பல திட்டங்களை நம்முடைய தலைவர் அவர்கள் இங்கே நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.






### ஆட்சியின் திட்டங்கள்

இந்த நான்கரை வருடத்தில் அரசு என்னென்ன சாதனை செய்திருக்கிறது என்று ஒரு புத்தகம் உங்களிடத்திலே அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கும். அதில் சில திட்டங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். ஆட்சிக்கு வந்தவுடன், நம் தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி, முதல் நாள் ஐந்து கையெழுத்துப் போட்டதில் முதல் கையெழுத்து இந்தத் திட்டம்தான். இதன் மூலம் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மகளிர் 850 கோடி முறை பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆய்வறிக்கையின்படி ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் மூலம் மாதம் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள். குறிப்பாக இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 13 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

### காலை உணவுத் திட்டம்.

ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 60 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்களின் மூலம், பள்ளிக்கூடத்துக்கு வந்த குழந்தைகள் அடுத்து கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று நம் தலைவர் கொண்டு வந்த திட்டம்தான் இது. அரசு பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் உயர்கல்வி படித்தாலும் ஊக்கத்தொகையாக மாதம் 1,000 ரூபாய் வழங்கி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 8 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 70 ஆயிரம் மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள்.

### உயர் கல்விச் சேர்க்கை

பள்ளிக்கூடம் முடித்துவிட்டு எத்தனை பேர் உயர் கல்வி படிக்கச் சென்று சேர்கிறார்கள் என்பதுதான் ஜி.இ.ஆர். மற்ற மாநிலங்கள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால் டபுள் டிஜிட் வருவதே பெரிய சாதனை. கேரளா மாநிலம் 10-லிருந்து 20 சதவிகிதத்துக்குள் வரும். இன்றைக்கு தமிழ்நாடு கிட்டத்தட்ட 45 சதவிகிதத்தோடு இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கை விதத்தில் நம்பர் ஒன் இடத்தில் நம் தமிழ்நாடு இருக்கிறது.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை கொடுப்போம் என்று நம் தலைவர் அவர்கள் சொன்னார். ஆட்சி பொறுப்பு ஏற்றோம். கடும் நிதி நெருக்கடி. அ.தி.மு.க அரசு எவ்வளவு கடன் சுமையில் வைத்துவிட்டுச் சென்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சிகள் மகளிர் உரிமைத்தொகை கொடுக்க மாட்டார் என்று விமர்சித்தார்கள். ஆனால், 2023-ஆம் செப்டம்பர் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் நம் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். கடந்த மாதத்துடன் 27 மாதம் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு 27,000 ரூபாயை நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார். அதில் சில குறைகள் இருந்தன. அதைத் தீர்ப்பதற்குத் தலைவர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற முகாம்கள் நடத்தினார். வருகிற டிசம்பர் 12-ஆம் தேதியிலிருந்து அந்த விடுபட்ட மகளிருக்கும் சேர்த்து கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று நம் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 60 ஆயிரம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### தொகுதி வளர்ச்சிப் பணிகள்

இந்த விக்கிரவாண்டி தொகுதியின் வளர்ச்சிக்காக இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செய்து கொடுத்திருக்கிறது. விவசாயிகளின் பல ஆண்டு கோரிக்கையை ஏற்று, 470 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நந்தன் கால்வாய் திட்டப் பணிகள் இன்றைக்கு முழு வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா அவர்களின் கோரிக்கையை ஏற்று பாவேந்தர் பாரதிதாசனுக்கு கோட்டைக்குப்பத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நினைவரங்கம் அமைக்க அறிவிப்பு வெளியாகியுள்ளது. புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டு வீடூர் முதல் விக்கிரவாண்டி வரை குடிநீர் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாம்பழப்பட்டு, மல்லிகைப்பட்டு உயர் மட்ட மேம்பாலம் உள்ளிட்ட சாலை மற்றும் மேம்பால திட்டங்கள் என பல திட்டங்கள் இங்கே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அன்னியூரில் புதிய தீயணைப்பு நிலையம் கட்டப்பட்டிருக்கிறது. இப்படி நான் சொல்லிக் கொண்டே போகலாம்.

### தமிழ்நாடு முதல் இடம்

இந்த விக்கிரவாண்டி தொகுதியில் மட்டும் இப்படி பல்வேறு திட்டங்களை நம்முடைய கழக அரசும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் கொண்டு வந்திருக்கிறார். இது மாதிரியான முற்போக்கான திட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு நம்பர் ஒன் மாநிலமாக பெயர் பெற்றிருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. ஒன்றிய அரசு சொல்லியிருக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு முதல் முறையாக இந்திய வரலாற்றிலேயே, தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதல் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சியுடன், 11.19 சதவிகித வளர்ச்சியோடு இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது.

இதையெல்லாம் பார்த்துப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசும், அதனுடைய அடிமைகளும் இன்றைக்கு எப்படியாவது தி.மு.க.வுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்திடலாமா? எப்படியாவது நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு நெருக்கடி கொடுத்திடலாம் என்று பல்வேறு வழிகளில் முயற்சி செய்கிறார்கள். நிதி உரிமை, கல்வி உரிமை, மொழி உரிமையைத் தடுத்து நிறுத்துகிறார்கள். மாநில உரிமைகள் அத்தனையும் தடுக்கிறார்கள்.

புதிய கல்வி கொள்கையை கொண்டு வந்தார்கள். அனைத்து மாநிலங்களும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டது. ஆனால், நம்முடைய தலைவர் முடியாது என்றார். இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் அதன் மூலம் குறுக்கு வழியில் மீண்டும் இந்தி திணிப்பை தமிழ்நாட்டின் மேல் திணிப்பதற்கான வழிதான் புதிய கல்விக் கொள்கை. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுகொண்டால், மீண்டும் தமிழ்நாட்டுக்குள் சமஸ்கிருதத்தை எப்படியாவது திணிப்பதற்கான வழிதான் புதிய கல்விக் கொள்கை. மீண்டும் நாம் ஒழித்த குலக்கல்வி திட்டத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான திட்டம் தான் புதிய கல்விக் கொள்கை.

ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாகச் சொன்னார், ``மற்ற மாநிலங்கள் எல்லாம் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டன. ஆனால், தமிழ்நாடு மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை, ஏன்?" அதனால் நாங்கள் தரவேண்டிய நிதிப் பகிர்வு 2,500 கோடி ரூபாயைத் தமிழ்நாட்டுக்குத் தரமாட்டேன்"என்று சொன்னார்கள்.

2,500 கோடி தரவில்லையென்றாலும் பரவாயில்லை. நீ 10,000 கோடி கொடுத்தாலும் எந்தக் காலத்திலும் நான் தமிழ்நாட்டுக்குள் புதிய கல்விக் கொள்கையை நுழைய விடமாட்டேன் என்று சொல்லி இன்றைக்குச் சட்டப் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருப்பது நம் முதலமைச்சர் அவர்கள். மொழி உரிமையை நாங்கள் பாதுகாப்போம் என்று சொன்ன முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### எதிர்ப்புக் குரல்

தொகுதி மறுவரையறைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை முதன் முதலாக எதிர்த்து குரல் கொடுத்தது நம் தலைவர் அவர்கள்தான். இந்தியாவிலேயே முதல் கட்சியாக எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம். மக்கள் தொகையை கட்டுப்படுத்தியதால், நம் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறைத்து, நம் மாநில உரிமையை குறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள்.

இன்றைக்கு எஸ்.ஐ.ஆர். (SIR) என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து ஒன்றிய பா.ஜ.க அரசு தேர்தல் ஆணையம் மூலமாக நம் வாக்குரிமையைப் பறிக்கிறார்கள். இந்த எஸ்.ஐ.ஆர். திட்டத்தின் மூலமாக அவர்களுடைய முழு நோக்கமே பா.ஜ.க-வுக்கு எதிராக இருக்கக்கூடிய, பா.ஜ.க-வுக்கு எதிராக வாக்களிக்கக்கூடிய இஸ்லாமிய மக்கள், மகளிர், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குரிமையை எப்படியாவது தடுத்துப் பறித்துவிட வேண்டும் என்பதுதான் எஸ்.ஐ.ஆர் திட்டத்தின் நோக்கம்.

### மிக மிக முக்கியம்

விக்கிரவாண்டி தொகுதியைப் பொறுத்தவரைக்கும் இந்த எஸ்.ஐ.ஆர். பணிகளை நீங்கள் மிகவும் விழிப்புணர்வுடன் மிகத் தெளிவாகச் செய்து வருகிறீர்கள் என்ற அறிக்கை வந்துள்ளது. களத்தில் உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு கழக நிர்வாகிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைக்கு இந்த எஸ்.ஐ.ஆர். பணிகளை நீங்கள் சிறப்பாகச் செய்ததால் நம்முடைய வெற்றி இன்றைக்கு ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஒரு வெற்றி. இருந்தாலும் வெற்றி நிச்சயம் என்று நாம் கவனக்குறைவாக இருந்துவிடக் கூடாது. அடுத்த நான்கு மாத காலம் மிக மிக முக்கியம்.

இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணாவும் இல்லை, திராவிடமும் இல்லை, முன்னேற்றமும் இல்லை, இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு அந்தக் கழகத்தில் யாருமே இல்லை... இந்த நிலைமை இன்றைக்கு அ.தி.மு.க.வுக்கு உருவாகி இருக்கிறது. ஃபேஸ்புக்கில் பார்த்தீர்கள் என்றால், ஃபேக் ஐ.டி. (Fake ID) என்று நிறைய பேர் சுற்றுவார்கள். வெறும் பெயரை மட்டும் வைத்துக்கொள்வார்கள். உண்மையாக அப்படி ஒரு ஆள் இருக்க மாட்டார்கள். அதுமாதிரி இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலில் திராவிடம் என்ற பேரில் இருக்கக்கூடிய ஃபேக் ஐ.டி.தான் அ.தி.மு.க என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த ஃபேக் ஐ.டி.-க்கு உண்மையான அட்மினாக யார் இருக்கிறார் என்று பார்த்தீர்கள் என்றால், அமித்ஷா அவர்கள்தான்.

இன்றைக்குத் திருப்பரங்குன்றம், மதுரையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு மதக்கலவரத்தை ஏற்படுத்தி, சங்கிகள் எப்படியாவது உள்ளே நுழைந்துவிட முடியாதா என்று பல வழிகளில் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். அதற்கு நம் அடிமைக் கூட்டமும் துணையாக நிற்கிறது. அவர்களுக்கெல்லாம் ஒன்றை மட்டும் இந்தக் கூட்டத்தின் வாயிலாகச் சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாடு என்றைக்கும் முடநாடு ஆகாது.

தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், டாக்டர் கலைஞர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட மண் நம்முடைய திராவிட மண், தமிழ்நாடு மண். நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சி இருக்கிற வரைக்கும் நிச்சயம் நம்முடைய தமிழ்நாடு மண்ணை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாதுகாப்பார். ஆகவே சங்கிகளின் பருப்பு என்றைக்கும் தமிழ்நாட்டில் வேகவே வேகாது. தி.மு.க-வின் கடைசி உடன்பிறப்பு இருக்கிற வரைக்கும், கருப்பு சிவப்பு வேட்டி கட்டிக் கொண்டிருக்கக்கூடிய கடைசி உடன்பிறப்பு இருக்கிறவரைக்கும், சங்கி கூட்டத்தை தமிழ்நாட்டுக்குள் காலெடுத்து வைக்கவே நாம் விடமாட்டோம்.

இன்றைக்குப் பாசிச பா.ஜ.க-வைக் களத்தில் எதிர்கொள்கின்ற அரசியல் பணியாக இருக்கட்டும், ஒன்றிய அரசு தருகின்ற நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற அரசுப் பணியாக இருக்கட்டும், இன்றைக்கு இரண்டிலுமே முத்தமிழறிஞர் கலைஞரின் மறு உருவமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இதையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை இன்றைக்கு நம்மிடம் இருக்கிறது. இங்கு பூத் கமிட்டி உறுப்பினர்கள் வந்திருக்கிறீர்கள். நம்மிடம் கொள்கை, அரசின் திட்டங்கள், சாதனைகள் இருக்கிறது. நம்முடைய தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்: "இந்த நான்கரை வருடத்தில் நாம் கொண்டு வந்துள்ள திட்டங்களால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒருவராவது நிச்சயம் பயன்பெற்றிருப்பார்கள். அந்தத் திட்டத்தை அவர்களிடம் ஞாபகப்படுத்துங்கள்."

அடுத்த நான்கு மாதம் மக்களோடு நெருங்கிய நேரடி தொடர்பில் நாம் இருக்க வேண்டும். ஏற்கனவே 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பின் கீழ், நம் உடன்பிறப்புகள் கிட்டத்தட்ட அனைத்து வீடுகளுக்கும் சென்று ஒவ்வொருத்தரையும், ஒவ்வொரு வாக்காளரையும், மக்களையும் நீங்கள் நேரடியாகச் சந்தித்திருக்கிறீர்கள்.

### திண்ணைப் பிரச்சாரங்கள்

இன்றைக்கு நான் இந்தக் தொகுதியில் பேசிட்டு, மாலையில் வேறு தொகுதிக்குச் சென்றுவிடுவேன். அதன் பிறகு நாளை வேறு தொகுதிக்குச் சென்றுவிடுவேன். ஆனால், அடுத்த நான்கு மாத காலம் மிக மிக முக்கியம். நீங்கள் தான் இங்கு இருக்கப் போகிறீர்கள். மக்களைச் சந்தித்துத் தெருமுனைப் பிரச்சாரத்தில் ஈடுபடுங்கள். அவர்களின் குறைகளைக் கேளுங்கள். அதைத் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக இருந்தால், நிச்சயம் செய்து கொடுங்கள். தீர்க்க முடியவில்லை என்றாலும் அவங்களுடைய பிரச்சினையைக் கேட்டீர்கள் என்றாலே, அவர்கள் மனதில் இருக்கக்கூடிய பாதிப் பாரம் நீங்கும். அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நீங்கள் மாறுவீர்கள்.

எனவே சிறு சிறு கூட்டங்கள், துண்டறிக்கைகள், சமூக வலைதளங்கள் மூலமாக மக்களிடம் பேசிக்கொண்டே இருங்கள். திண்ணைப் பிரச்சாரங்களை மேற்கொள்ளுங்கள். இந்தத் தெருவுக்கு நான் பொறுப்பு, இந்த 10 குடும்பத்திற்கு நான் பொறுப்பு என்று உங்களுக்குள் அந்தப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இன்னும் நான்கு மாத காலங்கள் இருக்கின்றன. எனவே அந்தக் களப்பணியை நீங்கள் மேற்கொள்ளுங்கள்.

நம்முடைய தலைவர் அவர்கள், ``வெல்வோம் 200, படைப்போம் வரலாறு" என்று நமக்கு 200 தொகுதி இலக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் தொடர்ச்சியாக பல்வேறு தொகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறேன். பொதுமக்கள், மகளிர், மாணவர்கள், கழகத்தின் உடன்பிறப்புகளைச் சந்திக்கிறேன். அவர்களுடைய எழுச்சி, பாசம், அவர்கள் காட்டுகின்ற உணர்வு எல்லாம் பார்க்கும்போது, 200 இல்லை, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, நம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான அந்தக் கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். அந்த வெற்றி, அதற்கான அந்தக் கடமை உங்கள் கையில் இருக்கிறது.நம் வெற்றி ஒன்றே நம்முடைய கண்களுக்குத் தெரிய வேண்டும்.

விக்கிரவாண்டி ஏற்கனவே சாதித்துக் காட்டிய தொகுதி. அதைவிட கூடுதல் சாதனையை சென்ற தேர்தலைவிட, அதிகமான வாக்கு வித்தியாசத்தை நாம் பெற வேண்டும் என்பதே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். வரலாற்றிலேயே முதல் முறையாக நம்முடைய தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் உட்கார வேண்டும் என்றால், அந்த வெற்றியைத் தேடி தர வேண்டிய பொறுப்பு இங்கு வந்திருக்கக்கூடிய உங்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கிறது என்று கூறிக்கொண்டு, ``வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு". வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் கௌதம சிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஜெயச்சந்திரன், டி.என்.முருகன், கற்பகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்வராஜ், அப்துல் சலாம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் தேன்மொழி, தலைமைக் கழக வழக்கறிஞர் சு.வை.சுரேஷ், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஜெயராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தினகரன்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ரவி, ஜெயபால், வேம்பி ரவி, கல்பட்டு ராஜா, ஆர்.பி.முருகன், வி.முருகன், கில்பர்ட் ராஜா, மும்மூர்த்தி, பேரூர் கழகச் செயலாளர் நைனா முகமது, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அருள்மொழி, சுரேஷ், சரவணன், சதீஷ், பாலமுருகன், பிரேமா அல்போன்ஸ், ராஜசேகர், சரவணக்குமார், ஞானவேல், எஸ்.எஸ்.அன்பழகன், அமுதா, இராஜீவ்காந்தி, அகிலன், ஏ.ஜி. எஸ்.கணேசன், சூர்யா, பூபதி, சுரேஷ் பாபு, மருத்துவர் காவியவேந்தன், கிருஷ்ணராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் பக்தவத்சலம், ராஜசேகர், ஏழுமலை, ஒன்றியக் குழு தலைவர்கள் சங்கீதா அரசி, கலைச்செல்வி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அன்பு, ராஜவேல், கலைவாணன், தேவேந்திரன், வீராசாமி, பாலாஜி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.